# முன்னுரை

## முன்னுரை

உணர்வின் வெளிப்பாடே கவிதை வடிவம் பெறுகின்றது. காலத்திற்கு ஏற்பக் கவிதையின் அமைப்புமுறையும், பாடுபொருள்களும் மாற்றம் பெறுகின்றன. பாரதியிடத்துத் தோன்றி இன்றளவும் ஆக்கம் பெற்றுள்ள புதுக்கவிதைகள் கவிதையின் உள்ளடக்கப் பொருளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்துள்ளதை அறியலாம். வடிவ அமைப்பு கவிதையின் கருத்து வெளிப்பாட்டுக்கு உற்ற துணை புரிகிறது.

இன்றைய புதுக்கவிதைகள் சமகாலச் சிக்கல்களை யதார்த்த நிலையில் வெளிப்படுத்திக் காட்டும் தன்மையைப் பெற்றுள்ளன. சமுதாய நிலைகளை, மக்கள் வாழ்வின் நிதர்சனங்களை எடுத்துக் காட்டுவதுடன், மக்களை விழிப்படையச் செய்து முன்னேற்றப் பாதையில் செல்லவும் புதுக்கவிதைகள் வழி வகுக்கின்றன.

### ஆய்வுப்பொருள்

வசனகவிதை என்ற பெயரில் தோற்றம் பெற்று எழுத்துக் காலத்தில் முதன்மை இடம் பெற்ற பெருமை புதுக்கவிதைக்கு உண்டு. பல்வேறு காலகட்ட இதழ்களால் வளர்ச்சியை எட்டிய இக்கவிதை இயக்கம் வானம்பாடிக் கவிஞர்களால் புதிய உத்திகளை, பாடுபொருள்களைப் படைத்துக் காட்டப் பெரிதும் இடம் கொடுத்துள்ளது. தொடக்கக் காலம் முதல் இன்றளவும் உள்ளடக்கப் பொருள் வளர்ச்சி பெற்று வரும் தன்மையைப் புதுக்கவிதைகளில் காணமுடிகிறது. சமகாலச் சிக்கல்களைச் சித்திரித்துக் காட்டும் பணியினைப் புதுக்கவிதைகள் பின்பற்றி வருவதால் 'புதுக்கவிதைகளில் நிகழ்காலச் சித்திரிப்பு' என்ற தலைப்பே இவ்வாய்வின் பொருளாகிறது.

## ஆய்வின் நோக்கம்

விடுதலை உணர்வும், தேசிய உணர்வும் பாரதி காலத்தில் இடம் பெற்ற தன்மையைப் போல் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளை வடிவ அமைப்பின் உத்தியுடன் வெளிப்படுத்திக் காட்டும் தன்மை புதுக்கவிதைகளில் படிந்திருப்பதால், சமுதாயம், அரசியல், பொருளாதாரச் சித்திரிப்புக்கள் கவிஞர்களால் எவ்விதம் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன என்பதை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லை

காலத்தின் குரலை இன்றையக் கவிஞர்கள்அதிக அளவில் தம் படைப்புக்கள் மூலமாக வெளிப்படுத்த முனைந்து உள்ளனர். புதுக்கவிஞர்களின் படைப்புக்கள் நாளுக்கு நாள் பெருகிவரும் இன்றைய காலகட்டத்தில் ஆய்வின் எல்லை கருதி 1985 முதல் 1990 வரையில் அச்சில் வெளிவந்த கவிதை நூல்கள் மட்டுமே முதன்மை ஆதாரமாக இவ்வாய்விற்கு மேற்கொள்ளப் பட்டுள்ளன. இக்காலகட்டத்துக் கவிஞர்கள் மரபிலிருந்து முழுவதும் விடுபட முடியாமல் மரபும், புதுமையும் இணைய கவிதைப் படைப்புக்களைச் செய்துள்ளனர். எனவே புதுக்கவிதைகளும், இந்நூற்றாண்டுகளில் வெளியான கவிதைப் படைப்புக்களும் இவ்வாய்விற்கு அடிப்படை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

## ஆய்வு மூலங்கள்

1985 முதல் 1990 வரையில் நூல் வடிவில் தொகுக்கப் பெற்றுள்ள புதுக்கவிதைகளும், சிறந்த பிற கவிதைகளும் ஆய்விற்கு முதன்மைச் சான்றாதாரமாக அமைகின்றன. ஆய்வுத் தலைப்பினை ஒட்டிச் சமுதாயம், அரசியல், பொருளாதாரம், பெண்ணியம் தொடர்பான நூல்களும், ஆய்வுப் பொருளுடன்

தொடர்புடைய ஆய்வு நூல்கள், கவிதை நூல்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவையும் துணைச் சான்றாதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வு முன்னோடிகள்

புதுக்கவிதை பற்றி இன்றளவும் பல ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'தற்காலத் தமிழ்ப் புதுக்கவிதைகள் ஓர் ஆய்வு' (1976) என்ற தலைப்பில் எஸ்.அரங்கராசன், 'புதுக்கவிதையில் படிமங்கள்' (     ) என்ற தலைப்பில் திரு.சுதந்திரமுத்து, 'தமிழ்ப் புதுக்கவிதையின் பாடுபொருள்' (1986) என்ற தலைப்பில் ஆ.செகந்நாதன் போன்றோர் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளனர்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் 'தமிழில் புதுக்கவிதை இயக்கமும் எழுத்து இதழும்' (1985) என்ற தலைப்பில் செ.சு.வள்ளியம்மாள், மு.இரா.சுப்பிரபேகம் 'தமிழ்ப் புதுக்கவிதைகளில் சமகாலப் பிரச்னை சித்திரிப்பு' (1989) என்ற தலைப்பிலும், 'தமிழ்ப் புதுக்கவிதைகளில் மேற்கத்திய தாக்கம்' (1990) என்ற தலைப்பில் எஸ்.ஆவுடையப்பனும், 'பத்தாண்டு தமிழ்க் கவிதைகள்' (1982) என்ற தலைப்பில் மு.தமிழ்க்குடிமகனும், 'புதுக்கவிதையில் உள்ளடக்கம்' (1987) என்ற தலைப்பில் சுசீலாவும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளனர்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் சமுதாய உணர்வு' (1978) என்ற தலைப்பில் பி.கண்ணையன், 'தற்காலத் தமிழ்க் கவிதைகளில் உத்திகள்' (1979) என்ற தலைப்பில் எஸ்.செல்லப்பன் போன்றோர் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளனர்.

'புதுக்கவிதையில் சமுதாயம்' (1991) என்ற தலைப்பில் வீ.உண்ணாமலை, அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும், 'தமிழ்ப் புதுக்கவிதையில் மகளிர் சிக்கல்களும் தீர்வுகளும்' (1990) என்ற தலைப்பில் கி.விசயலட்சுமியும் பாரதியார் பல்கலைக் கழகத்திலும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்து உள்ளனர்.

'தமிழ்க் கவிதைகளில் காந்தீயத் தாக்கம்' (1981) என்ற தலைப்பில் ஈ.வே.மாரியப்பன், "நா.காமராசன் படைப்புக்களில் சமுதாயப் பார்வை" (1980) என்ற தலைப்பில் எஸ்.வேலப்பன், 'புதிய தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்' (1980) என்ற தலைப்பில், ஏ.செகந்நாதன், 'சிற்பியின் புதுக்கவிதைகள் ஓர் ஆய்வு' (1980) என்ற தலைப்பில் எஸ்.மங்கையர்க்கரசி, "புதுக் கவிதைகளில் பெண்கள் பிரச்னை சித்திரிப்பு" (1985) என்ற தலைப்பில் மு.இரா.ச.ஃப்ராபேகம், 'புதுக்கவிதைகளில் மகளிர் நிலை' (1985) என்ற தலைப்பில் கனகலக்குமி, 'வரதட்சணைப் பிரச்னைகளும் புதுக்கவிதைகளும்' (1986) என்ற தலைப்பில் கி.விஜயலக்குமி போன்றோர் எம்.ஃபில் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளனர்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் 'அப்துல்ரகுமான் சுட்டு விரல் ஓர் மதிப்பீடு' (1989) என்ற தலைப்பில் சா.நாச்சிமுத்து, 'கவிஞர் வைரமுத்துவின் பாடல்கள் ஒரு சமுதாயப் பார்வை' (1986) என்ற தலைப்பில் மு.பாண்டியன், 'இன்குலாப் கவிதைகளில் மனிதம் - ஓர் ஆய்வு' (1980) என்ற தலைப்பில் த.புருஷோத்தமன், '1989-ஆம் ஆண்டுக் கவிதைகள் ஒரு மதிப்பீடு' (1990) என்ற தலைப்பில் வே.வேலுச்சாமி போன்றோர் ஆய்வு செய்துள்ளனர்.

'இதழ்களில் புதுக்கவிதை' (1990) என்ற தலைப்பில் ஆ.விஜயஉஷா, 'அப்துல்ரகுமான் படைப்புக்களில் சமுதாயப் பார்வை' (1988) என்ற

தலைப்பில் சு.பழனியம்மாள், 'தொண்ணூறில் புதுக்கவிதை உள்ளடக்கப் பகுப்பாய்வு'(1990) என்ற தலைப்பில் ம.நாகராசன், 'ஒராண்டுப் புதுக்கவிதைகள்'(1989) என்ற தலைப்பில் கிரேஷியா ஏசுபாய் போன்றோர் எம்.ஃபில் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளனர்.

புதுக்கவிதையின் தொடர்பாக ஆய்வு நூல்கள் பல வெளிவந்துள்ளன. பின்வரும் தலைப்புக்களில் ஆய்வு மேற்கொண்டு நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். 'மார்க்சிய அழகியல்', 'கம்யூனிஸ்டும் கவிதையும்', 'புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்' ஆகிய நூல்களை நா.வானமாமலையும், 'புதுக்கவிதை நோக்கும் போக்கும்' என்ற நூலை ந.சுப்புரெட்டியாரும், 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலை வல்லிக்கண்ணனும், 'இருபதில் கவிதை' 'புதுக்கவிதை நாலு கட்டுரைகள்' என்ற நூல்களைத் தமிழவனும் இயற்றியுள்ளனர். ஆ.தசரதன் 'தற்காலத் தமிழ்க் கவிதைகள்' என்ற நூலையும், ந.வீ.செயராமன் 'புதுக்கவிதையியல்' என்ற நூலையும், ஆ.செகந்நாதன் 'புதுக்கவிதை ஒரு திறனாய்வு', 'புதிய கவிதைகளில் மார்க்சியம்' என்ற நூல்களை எழுதியுள்ளனர்.

'புதுக்கவிதை நடையியல்' என்ற நூலை கலைச்செல்வனும், 'சமுதாய நோக்கு' என்ற நூலை சாலை.இளந்திரையனும், 'இலக்கியத்தில் சமுதாயப் பார்வை' என்ற நூலை ஜான் சாமுவேலும் இயற்றியுள்ளனர். 'புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை' என்ற நூலை பாலாவும், 'கலைவாழ்க்கை அனுபவம்' என்ற நூலை வெங்கட்சாமிநாதனும், 'தற்காலத் தமிழ் இலக்கியம்' என்ற நூலை இரா.தண்டாயுதமும், 'தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்' என்ற நூலை யோகீசுவரனும் இயற்றியுள்ளனர்.

'எதிர்காலத் தமிழ்க்கவிதை' என்ற நூலை மீராவும், 'புதுக்கவிதையில் நவீனப் போக்குகள்' என்ற தலைப்பில் ஹெச்.ஜி.ரசூலும், 'இலக்கியமும்

திறனாய்வும்' என்ற தலைப்பில் க.கைலாசபதியும், 'இலக்கிய விமரிசனம் ஒரு மார்க்சியப் பார்வை' என்ற தலைப்பில் கோ.கேசவன், 'இலக்கணம் மீறிய கவிதைகள்' என்ற தலைப்பில் ப.லோகநாதன், 'பாரதியும் பிறரும் பிச்சமூர்த்தியும் பிறரும்' என்ற தலைப்பில் சி.கனகசபாபதியும், 'தமிழ்ப் புதுக்கவிதை ஒரு திறனாய்வு' என்ற நூலை சு.அரங்கராசும் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' என்ற நூலை மா.இராமலிங்கமும் இயற்றியுள்ளனர்.

'சிற்பியின் படைப்புக்கலை' என்ற நூலை இரா.இராசகோபாலன், தே.ஞானசேகரன் இருவரும் தொகுத்துள்ளனர். 'பெண்ணியமும் கலை இலக்கியக் கோட்பாடுகளும்' என்ற நூலை சண்முகசுந்தரம்(தொ.ஆ) வெளியிட்டுள்ளார்.

<u>ஆய்வு அணுகுமுறைகள்</u>

ஆய்வுத் தலைப்பினை ஒட்டி இவ்ஆய்வில்,

1. பகுப்பாய்வு அணுகுமுறையும் ( Analytical Method )
2. விளக்க ஆய்வுமுறையும் ( Descriptive Method )
3. மதிப்பீட்டாய்வு முறையும் ( Evaluative Method )
4. அமைப்பியல் (Structuralism )
5. ஒப்பியல் ஆய்வு முறையும் ( Comparative Method )
6. சமூக இயல் ஆய்வு முறையும் ( Sociological Method )
7. உளவியல் அணுகுமுறையும் ( Psychological Method )

மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

புதுக்கவிதைகளில் காலப் பின்புலம் என்ற தலைப்பில் பகுப்பாய்வு அணுகுமுறையும், மதிப்பீட்டாய்வு அணுகுமுறையும், 'குறியீடு' என்ற தலைப்பில் விளக்க ஆய்வு முறையும், உளவியல் அணுகுமுறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுக்கவிதையின் உள்ளடக்கப் பொருள்களான சமுதாயம், அரசியல், பொருளாதாரம் என்ற தலைப்புக்களில் சமூக இயல் ஆய்வு முறையும், ஒப்பியல் ஆய்வு முறையும் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. பெண்ணியம் என்ற தலைப்பில் அமைப்பியல், ஒப்பியல் ஆய்வு முறை இரண்டும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## ஆய்வேட்டின் அமைப்பு

"புதுக்கவிதைகளில் நிகழ்காலச் சித்திரிப்பு" என்னும் இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக உள்ளடக்கப் பொருள்கள் குறித்துப் பின்வரும் ஆறு இயல்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

1. காலப் பின்புலம்
2. சமுதாயம்
3. பொருளாதாரம்
4. அரசியல்
5. பெண்ணியம்
6. குறியீடு

'காலப் பின்புலம்' என்னும் முதல் இயலில் இருபதாம் நூற்றாண்டில் கவிதை எழுச்சிக்குரிய காரணங்கள், மேலை நாடுகளில் புதுக்கவிதை, புதுக் கவிதையின் சொல்லாக்கமும், வளர்ச்சி நிலைகளும் என்ற தலைப்பில் பகுத்-துரைக்கப்பட்டுள்ளன. அடுத்து புதுக்கவிதையின் வளர்ச்சி நிலைகள், மணிக் கொடிக்காலம், எழுத்துக்காலம், கசடதபறக் காலம், வானம்பாடிக் காலம், வானம்பாடிக்குப் பிற்பட்ட காலம், இன்றைய நிலை என்ற உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. புதுக்கவிதையின் தோற்றத்திற்கு மேலை நாடுகளின் கவிதை இயக்கங்கள் எவ்வாறு அடிகோலின என்ற கருத்து எடுத்து-ரைக்கப்பட்டுள்ளது. காலச்சூழல் கவிதை வளர்ச்சியில் ஏற்படுத்திய

மாற்றங்களுடன் இன்றைய புதுக்கவிதைகளின் பாடுபொருளுக்குக் காலச் சூழ்நிலையே காரணம் என்ற கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'சமுதாயம்' என்னும் அடுத்த இயலில் புதுக்கவிதைகளில் வாழ்க்கைச் சித்திரிப்பும், தனிமனிதச் சித்திரிப்பும் அமைந்துள்ள விதம் இருபிரிவாக அமைந்து விளக்கப் பெறுகிறது. கூடிவாழும் மக்கள் கூட்டத்தினரின் வாழ்வு நிலை, ஏழ்மை, விரக்தி, சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமையக்கூடிய திரைப் படங்கள், பத்திரிகைகளின் இன்றைய நிலையும், மக்களின் செயல்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பெண்ணின் திருமணம் வரதட்சணையால் தடைப்படும் போக்கும், பெண்ணின் ஏழ்மை நிலைக்குரிய காரணங்களும் பற்றிக் கவிஞர்கள் எடுத்துக் கூறும் விதம் ஆராயப்பட்டுள்ளது. தனிமனிதச் சித்திரிப்பு என்ற தலைப்பில் கவிஞர், ஆசிரியர், இளைஞர், சிறுவர் போன்றோரின் இன்றைய நிலையும், மனிதனிடம் இயல்பாக உள்ள மரணபயமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆண், பெண் இருபாலாரிடத்தும் காதல் உணர்வு வெளிப்படும் நிலையும், காதல் தோல்விக்குரிய காரணங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

'பொருளாதாரம்' என்ற மூன்றாவது இயலில் இன்றைய நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கை நிலை, வறுமைக்குரிய காரணங்கள், உழைப்பாளி-களின் நிலை, உயர்வடையச் செய்யாத ஊதிய நிலை, முதலாளித்துவப் போக்கு போன்ற செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வர்க்கமுரண்பாட்டிற்குரிய காரணங்களை ஆராய்ந்து வர்க்கபேத ஒழிப்புக்கு மார்க்சியப் பொருளாதாரமும், சமதர்மமும் இன்றியமையாதன என்ற செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மாதச் சம்பளம் வாங்கும் குடும்பங்களின் பொருளாதார நிலை, இளைஞர்களின் வேலை தேடும்நிலை இரண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பொருளாதாரச் சமன்பாடு தேவை என்ற கவிஞர்களின் கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

'அரசியல்' என்னும் நான்காம்இயலில் கட்சிகளை ஆதரவாகக் கொண்டு அமைக்கப்படும் ஆட்சி அமைப்பின் தன்னலப்போக்கு, மக்களுக்குப் போய்ச் சேராத திட்டங்களின் தன்மை, அதிகார வர்க்கத்தால் பாதிக்கப் படும் மக்களின் நிலை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேர்தலின் செயல்பாடுகள், சட்டமன்றத்தின் நடவடிக்கைகள், நியாயமற்ற நீதிமுறை சுட்டிக்காட்டப் படுவதுடன், மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் அரசாட்சி முறையே இன்றைய சமுதாயத்திற்குத் தேவை என்ற கருத்து எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இந்நாட்டில் உண்மையான சுதந்திரம் நிலவவில்லை எனப் புதுக்கவிஞர்கள் கூறும் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. அரசியல் கட்சிகளால் ஏமாற்றமடைபவர்கள் இன்றைய தொண்டர்களே (சமுதாயத்தினரே) என்ற கருத்து சுட்டப்பெற்றுள்ளது. சட்டசபை, கட்சிமாற்றம் போன்ற செய்திகள் பற்றியபுதுக்கவிஞர்களின் கருத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

'பெண்ணியம்' என்ற அடுத்தஇயலில் பெண்ணினத்தைப் பற்றிய பல்வேறு சிக்கல்களை உள்ளடக்கிய செய்திகள் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன. பெண்களின் நிலை, திருமணத்தடை, வரதட்சணைக் கொடுமை, வேலைக்குச் செல்வோரின் இரட்டைச் சுமை, திருமணமாகாத பெண்களின் ஏக்கங்கள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன. ஆணாதிக்கச் சமூகம் பெண்களுக்குக் கொடுக்க மறுக்கும் உரிமைகள், பெண்களுக்குப் பாதுகாப்பின்மை, காதல் தோல்வி, பெண்ணின் அடிமை வாழ்க்கை நிலை போன்றவை பெண்ணினத்தைப் பாதிக்கும் நிலை விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பெண் உரிமை இயக்கங்களின் வாயிலாக சமூக, பொருளாதார ரீதியாக சமத்துவம் கேட்கும் பெண்களின் குரல் நாடெங்கும் ஒலிக்கப்படும் செய்தி, மேனாட்டில் எழுந்த பெண் உரிமை இயக்கங்களின் சிந்தனைகளுடன் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பெண்ணிடம் விழிப்புணர்வு வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தும்

கவிஞர்களின் கருத்துக்கள் வற்புறுத்திச் சொல்லப்பட்டுள்ளன. பெண்ணினத்தின் வெற்றி ஆண்வர்க்கத்தைச் சார்ந்து அமைந்துள்ளது என்ற கருத்தும், இருமைச் சமநிலை பெறலாம் என்ற கருத்துக்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

'குறியீடு' என்னும் ஆறாவது இயலில் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டும் கவிதைக்கு மனத்தின் மொழிவடிவமாகிய குறியீட்டின் இன்றியமையாமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. குறியீடு பற்றிய மேனாட்டார் மரபு, தமிழ் இலக்கிய மரபு, வடநூலார் சிந்தனை, உளவியல் சிந்தனை, குறியிலிருந்து வேறுபடும் தன்மை, குறியீட்டின் வகைகள் ஆதாரத்துடன் நிறுவப்பெற்றுள்ளன. மரபுக் குறியீடுகளையும், வழக்குக் குறியீடுகளையும் புதுக்கவிஞர்கள் கையாண்டுள்ளவிதம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கருத்துக்களை மறைத்துக் கூறுவதற்கு இன்றைய கவிஞர்களுக்குக் குறியீடு எந்த அளவில் பயன்பட்டிருக்கிறது என்பதனை சமுதாய, அரசியல், பொருளாதார விளக்கங்களுக்குரிய குறியீட்டு அமைப்பிலிருந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கவிஞர்கள் கையாண்டுள்ள கணிதக் குறியீடுகள், கட்புலப்படிம உத்தியின் சிறப்புத் தன்மைகள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன. 'மனிதன் ஓர் குறியீட்டு உயிரி' என்பதனைப்புதுக் கவிஞர்கள் நிலைநாட்டியுள்ளதைச் சான்றுகள் மெய்ப்பித்துக் காட்டும்விதம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

'புதுக்கவிதைகளில் நிகழ்காலச் சித்திரிப்பு' என்ற இவ்ஆய்வினை உள்ளடக்கிய இயல்தோறும் கண்டறிந்த செய்திகள் தொகுத்து முடிவுரையில் கூறப்பட்டுள்ளன. புதுக்கவிதைகளைப் பற்றி மேலும் ஆராய்ச்சி நிகழ்த்துவதற்குரிய சிந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

முடிவுரைக்கு அடுத்து ஆய்வுக்குப் பயன்படுத்திய துணைநூல்களின் பட்டியல் இடம்பெறுகிறது. இப்பட்டியல் கவிதை நூல்கள், ஆய்வுத்துணை நூல்கள் என்ற இரண்டு பிரிவில் அமைந்துள்ளது.